2003 மார்ச் 27]

திரு. ஜெக. வீரபாண்டியன்: நேரம் குறைவாக இருக்கிற காரணத்தால்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (28-3-2003) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

55. தகவல் தொழில்நுட்பம்/மென்பொருள் வளர் நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதி சார்ந்த தொழில் அலகுடைய தொழில்களை 1947 ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் XIV of 1947) முதல் அட்டவணையில் இணைப்பது குறித்து தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் 7-1-2003 ஆம் நாளிட்ட 4 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1947 ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் XIV of 1947) 40 ஆவது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

56. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்து ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

57. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்து ஏழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

58. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் இருபத்து ஏழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

ஏதுமில்லை.